20.11.2025

O.S.No.377/2013

வா.சா.3.திரு.சந்திரமோகன், த.பெ.திரு.சாத்தப்பன்.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 12ம் வகுப்பில் பெயிலாகிவிட்டேன். நான் வீடு வாங்கிக் கொடுக்கும், இடம் வாங்கிக் கொடுக்கும் தரகராக தொழில் செய்து வருகிறேன். ஆதார் கார்டில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் எத்தனை ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன் என்றால் 56 ஆண்டுகளாக குடியிருக்கிறேன். 1ம் வாதி ஜெய்சங்கர் எந்த முகவரில் குடியிருந்து வருகிறார் என்றால் மெயின் ரோடு, மேலூரில் குடியிருந்து வந்தார். கதவு எண் தெரியாது. 35 ஆண்டுகளுக்கு முன்பு குடியிருந்து வந்தார். 2ம் வாதி அங்கமுத்து எனக்கு நெருங்கிய நண்பரா என்றால் எனக்கு பழக்கம். எத்தனை ஆண்டுகளாக பழக்கம் என்றால் 30, 35 ஆண்டுகளாக பழக்கம். இடம் வாங்கும்போது பழக்கம் ஏற்பட்டது. 1ம் பிரதிவாதி சோலை என்ற மாடம்மாள் எந்த முகவரியில் குடியிருந்து வருகிறார் என்றால் சண்முகநாதபுரத்தை சேர்ந்தவர். முகவரி தெரியாது. RERA சட்டப்படி நான் புரோக்கர் தொழில் செய்வதற்கு உரிமம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். சோலையம்மாள் எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4 ஆவணங்களில் நான் கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். சோலையம்மாள் எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் வா.சா.ஆ.6 கிரைய இரசீதிலும் நான் கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். 22.11.1995ம் தேதி வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதியுடன் பத்திர எழுத்தர் வீரணன் அலுவலகத்தில் நான் இருந்தேன் என்று சொல்வது

சம்பந்தமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 23.11.1995ம் தேதியில் நான் பதிவு அலுவலகத்தில் இருந்தேன் என்பதற்கும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால், இருந்தேன். நிரூபண வாக்குமூலத்தில் ராமசாமி, அக்கினி, பத்திர எழுத்தர் வீரணன் ஆகியோர் காலமாகிவிட்டனர் என்று நான் சொல்லியுள்ளது சம்பந்தமாக அவர்களது இறப்பு சான்றிதழ் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் புரோக்கர் தொழில் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள இராமசாமி என்பவர் வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4 ஆவணத்தில் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்வதற்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை. 1ம் வாதி ஜெய்சங்கர் தான் அழைத்து வந்தார். எனக்கு 1ம் பிரதிவாதி சோலை என்ற மாடம்மாள் யார் என்றே தெரியாது என்றாலும், வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4 ஆவணம் குறித்தோ, அதில் குறிப்பிடப்பட்டுள்ள Transaction–குறித்தோ எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றாலும், வாதிகள் எனக்கு நெருக்கமானவர்கள் என்பதால் அவர்கள் சொல்லிக் கொடுத்தன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(திரு.P. மகாராஜன், எம்.எல்.,)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.